Registered as a Newspaper

யாழ்ப்பாணம்
நல்லூர் ஒளிநூலகம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 05 திங்கட்கிழமை (21-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 228

# சிம்பாப்வேயிலிருந்து இலங்கைக்கு ஷெல்கள் ஏற்றிவந்தகப்பல்எங்கே?

## புலிகள் கைப்பற்றி இருக்கலாம் என ஊகம்

கொழும்பு, ஜூலை 21

ஆபிரிக்க நாடான சிம்பாப்வேயில் இருந்து பல கோடி ரூபா பெறுமதியான ஷெல்களை இலங்கைக்கு ஏற்றி வந்த கப்பல் ஒன்று காணாமற்போய்விட்டது:

இந்தக் கப்பலில் 81 மில்லி மீற்றர் மோட்டர்களுக்குரிய 13 ஆயிரத்து 400 ஷெல்கள் ஏற்றப்பட்டிருந்தன.

இந்தக் கப்பல் சிம்பாப்வேயில் இருந்து புறப்பட்டு மடகஸ்கார் தீவை அடைந்தது என்றும் —

கடந்த 2 ஆம் திகதி மடகஸ்கார் தீவில் இருந்து இலங்கை நோக்கிப் புறப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதன் பின்னர் இந்தக் கப்பலுடனான தொடர்புகள் இல்லாமற் போய்விட்டன:

இந்தக் கப்பலை ஷெல்களுடன் விடுதலைப் புலிகள் கடத்தி இருக்கலாம் என்று இலங்கை பாதுகாப்புத் துறையினர் கருதுவதாக பி. பி. ஸி. சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து பி. பி. ஸி.யில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

கிடைத்துள்ள தகவல்களின்படி சிம்பாப்வே நாட்டில் இருந்து இலங்கைக்கு இந்த ஷெல்களைக் கொண்டு வருவதற்காக இம் மாத ஆரம்பத்தில் இவை கப்பலில் ஏற்றப்பட்டன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் சில பகுதிகளில் ஊரடங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 21

வலி. கிழக்கு, வலி. வடக்கின் சிலபகுதிகளை உள்ளடக்கி நேற்றுக்காலை திடீரென அறிவிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் காரணமாக பல பகுதிகளில் மக்களின் சகஜ வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

ஊரடங்கு அமுல் செய்யப்பட்ட பகுதி ஊடாக போக்குவரத்து தடைசெய்யப்பட்டதால், வேறு அலுவல்கள், வேலைகள் காரணமாக நகருக்கு வந்த மக்கள் நேற்றுக் காலையில் தமது வீடுகளுக்கு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டது.

கோண்டாவிலில் உள்ள வட பிராந்திய போக்குவரத்து சபை தலைமையகத்தில் இருந்து மத்திய பேருந்து நிலையத்துக்கு பஸ்கள் வர

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. கட்சி எம். பி. மஹ்ரூப் உட்பட 6 பேர் திருமலையில் சுட்டுக்கொலை!

## இருவார காலத்தில் 2 ஆவது சம்பவம்

கொழும்பு, ஜூலை 21

திருகோணமலை மாவட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் என். ஈ. எச். மஹ்ரூப் நேற்றுக் காலை 10.30 மணியளவில் திருகோணமலை நிலாவெளி வீதியில் 6 ஆம் கட்டையடியில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடன் பஜரோ ஜீப்பில் பயணம் செய்த 5 பேரும் இச்சம்பவத்தில் உயிரிழந்தனர்.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

நேற்று முன்தினம் மூதூருக்கு சென்ற மஹ்ரூப் தோப்பூரில் கடந்த வாரம் சுட்டுக் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் உறவினர்களுடன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றிவளைப்பில் 25 தமிழர் கைது!

## மஹ்ரூப்பின் இறுதிக்கிரியை இன்று

திருகோணமலை, ஜூலை 21

திருகோணமலை மாவட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப் உட்பட அறுவர் படுகொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலீஸார் நேற்று மாலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப மழைகாலம் முந்தினால் அம்போ தான்...!

## திருமலை நகர் சோபை இழந்தது

திருகோணமலை, ஜூலை 21

திருகோணமலை மாவட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் என். ஈ. எச். மஹ்ரூப்பின் கொலையையடுத்து திருகோணமலை நகர் நேற்று சோபை இழந்து காணப்பட்டது.

மக்கள் நடமாட்டமின்றி வீதிகள் வெறிச்சோடிக்கிடந்தன. கடைகள் ஒரளவே திறந்திருந்தன. (இ-3-150)

## ஒட்டுசுட்டான் பகுதி நோக்கி படையினர் கடும் ஷெல் வீச்சு!

### பாடசாலை சேதம்; ஒருவர் காயம்

வவுனியா, ஜூலை 21

ஒட்டுசுட்டான் பகுதியை நோக்கி நேற்று காலை 11 மணி முதல் 2 மணித்தியாலங்களாக கடும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

35 க்கு மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த பாடசாலை ஒன்று ஷெல்லினால் சேதமடைந்தது.

அப்பகுதியில் உள்ள விநாயகர் ஆலயம் ஒன்றில் இடம் பெற்ற வைபவத்தில் கலந்து கொண்ட பக்தர்கள் சிதறி ஓடினர்.

இத்தாக்குதலில் மோட்டார் சைக்கிளில் சென்ற கதிர்காமத்தம்பி (54 வயது) என்பவர் படுகாயமடைந்தார்.

(இ-3-164)

## மணலாறு மோதலில் 15 புலிகள் களப்பலி!

வவுனியா, ஜூலை 21

மணலாறுப் பகுதியில் நேற்று முன்தினம் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றதாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

இம்மோதலில் படையினருக்கு ஏற்பட்ட சேதம்தெரியவரவில்லை என்றும்— தமது தரப்பில் 15 பேர் களப்பலியானதாகவும்— 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

அதேசமயம் இந்த மோதலில் நான்கு படையினர் சிறு காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சின் இராணுவத் தலைமையகம் தெரிவித்தது. (இ-3-5-164)

# மழைகாலம் ஆரம்பிக்க முன் பாதை திறக்க நடவடிக்கை

## வெற்றி அதிலேயே தங்கியுள்ளது என்கிறார் அனுருத்த

கொழும்பு, ஜூலை 21

"தற்போது நடைபெறும் யுத்தத்தில் நாம் வெல்ல வேண்டுமானால் வவுனியா — கிளிநொச்சிப் பாதை திறக்கப்பட வேண்டும்."

இப்படிப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்தார்.

களுத்துறையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்:

தரைப் பாதையைத் திறப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள நடவடிக்கை அடுத்த 3 மாத காலத்துக்குள் முடிக்கப்பட வேண்டும். அதன் பின் மழைகாலம் ஆரம்பித்தால் நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது.

இப்படி அவர் மேலும் கூறினார்.

## சூரிச் மாநாட்டில் புலிகள் பிரதிநிதிகளும் அமைச்சர்களுக்கு அழைப்பில்லை

கொழும்பு, ஜூலை 21

சுவிட்சர்லாந்தின் சூரிச்நகரில் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 4 நாள்கள் நடைபெறவிருக்கும் சர்வதேச விழிப்பு அமைப்பின் மாநாட்டில் விடுதலைப் புலிகள் அமைப்பு பிரதிநிதிகளும் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக கடந்த காலங்களில் இலங்கை—இந்திய அரசுகளுக்கும், விடுதலைப் புலி

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் கைதாவதைத் தடுக்க கொழும்பில் பிரசைகள் குழுக்கள்

கொழும்பு, ஜூலை 21

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறத்திலும் அப்பாவித் தமிழர்கள் கைது செய்யப்படுவதையும், துன்புறுத்தப்படுவதையும் தடுக்கும் வகையில் பிரசைகள் குழுக்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

சோதனை நடவடிக்கைகளின் போதும் —

சந்தேகத்தின் பேரில் கைதாகும் போதும் தமிழ் மக்கள் பெரிதும் இடையூறுகளை எதிர்நோக்குவதாகத் தமிழ்க் கட்சிகள் அரசுக்குச் சுட்டிக்காட்டியிருந்தன.

இது தொடர்பாக அண்மையில் ஆராய்ந்த உயர்மட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் பிரசைகள் குழுக்கள் அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்படுபவர்கள் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களா என்பதை இந்தப் பிரசைகள் குழுக்கள் கண்டறியும் என்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார். (இ-3)

# கப்பல் சேவை குறித்து இன்று முடிவு தெரியவரும்

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை மீள ஆரம்பிப்பது தொடர்பான முடிவு இன்று பிற்பகல் தெரியவரும்.

இது குறித்து வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீர, திருகோணமலை பிரதேச செயலகத்துக்கு நேற்று அறிவித்துள்ளார்.

இக்கப்பல் சேவையை நடத்துவதற்காக அதிகார சபை ''அட்லாண்டிக் றிவர்'' என்ற கப்பலை வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

அதே சமயம்—இக்கப்பல் சேவையை நடத்துவது தொடர்பாக வடமாகாண மீள் குடியமர்வு அதிகார சபை அதிகாரிகளுக்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவற்றின் அதிகாரிகளுக்கும் இடையில் தொடர்ந்து பேச்சுக்கள் இடம் பெற்று வருகின்றன. (இ-3-150)

## ஆயுதப்படையினரின் பாதுகாப்பு சமாதானத்தைத் தர மாட்டாது

### அஷ்ரப் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

''ஆயுதப்படையினரின் பாதுகாப்பு அமைதியையோ சமாதானத்தையோ பெற்றுத் தரப் போவதில்லை. இந்த மண்ணில் இரத்த ஆறு ஓடுவதைத் தடுக்க இனங்களுக்கிடையே புரிந்துணர்வும், ஐக்கியமும் ஏற்பட வேண்டும்.''

துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட்ட மீலாத் நகர் மாதிரிக் கிராமத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். (ஐ-3)

## 2 நாள்கள் மட்டும் சிகிச்சை

திருநெல்வேலி ஜூலை 21

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் வாரம் மூன்று நாள்கள் நடத்தப்பட்டு வந்த நோயாளருக்கான சிகிச்சை தற்போது செவ்வாய், வெள்ளி ஆகிய இரு தினங்கள் மட்டும் நடத்தப்பட்டு வருகின்றது.

வேலணை அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஆ. திருநாவுக்கரசு புங்குடுதீவு சென்று இவ்விரு நாள்களிலும் வெளிநோயாளர்களைப் பார்வையிட்டு சிகிச்சை அளித்து வருகின்றார். (இ-135)

## நெடுங்கேணி மோதலில் அதிகாரியும் பலி!

கொழும்பு, ஜூலை 21

நெடுங்கேணிக்கு வடமேற்கே கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நேரடி மோதலின் கமாண்டோ படையணி அதிகாரியான மெல்றோ சிகல் என்பவரும் இறந்தார் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

3 மணிநேரம் நீடித்த இந்த மோதலில் ஓர் அதிகாரி உட்பட 17 படையினர் உயிரிழந்ததாக முன்னர் தகவல் வெளியாகியிருந்தது. (இ-3-150)

## வைத்தியசாலை இயங்கவில்லை

வடமராட்சி கிழக்கு மாமுனைப்பகுதியில் இயங்கி வந்த ஆயுள்வேத வைத்தியசாலை மூடப்பட்டுள்ளதால் செம்பியன்பற்று குடாரப்பு மாமுனைப் பகுதி மக்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர்.

மன்னார் அகதி முகாமில்

## தொற்று நோய்க்கு 6 குழந்தைகள் பலி!

கொழும்பு, ஜூலை 21

மன்னார் நகரில் தங்கியுள்ள அகதிகளிடையே பரவியுள்ள தொற்று நோயால் இதுவரை 6 குழந்தைகள் இறந்துள்ளனர்.

வன்னியில் இருந்து உயிலங்குளம் ஊடாக மன்னார் நகருக்கு வந்து, யாழ்ப்பாணத்துக்கான கப்பல் சேவை தடைப்பட்டுள்ளதால் அங்கு தங்கியுள்ள அகதிகளிடையே வயிற்றோட்டம், கண்நோய் போன்ற தொற்று நோய்கள் தீவிரமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வயிற்றோட்டம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து வகைகள் இல்லை என்றும் —

உடனடியாக மருந்து வகைகளை அனுப்பி வைக்குமாறும்— மன்னார் அரச அதிபர் குறூஸ் வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

வயிற்றோட்ட நோயால் இதுவரை 163 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-3-150)

எரிந்துகொண்டிருந்த வானில்

## கைகள் கட்டிய நிலையில் நால்வரின் சடலங்கள் மீட்பு!

### கல்கிசைப் பகுதியில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 21

கல்கிசைப் பகுதியில் வான் ஒன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட நால்வரின் சடலங்கள் கைகள் கட்டிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன. கொல்லப்பட்டவர்களின் சடலங்களுடன் அந்த வான் தீ வைத்துக் கொளுத்தப்பட்டிருந்தது.

கொல்லப்பட்டவர்களில் பாதாள உலகக் குழு ஒன்றின் முக்கிய தலைவர் எனக் கருதப்படும் களு அஜித், பகல விதானகே குணரட்ன, திலூக் ஆகிய மூவர் அடையாளம் காணப்பட்டிருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டு அந்த இடத்துக்கு விரைந்த போது சிலர் வான் மீது பெற்றோலை ஊற்றி தீ மூட்டியதைக் கண்டதாக சாட்சி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரு பாதாள உலகக் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலாக இருக்கலாம் எனப் பொலீஸார் கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் மன்னாரில் இரண்டு முகாம்கள்

கொழும்பு, ஜூலை 21

வன்னியில் இருந்து அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து வருவதையடுத்து அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் புதிதாக இரு முகாம்களை மன்னாரில் திறந்துள்ளது.

மடு—புள்ளிக்குளம், பாலம் போட்டைகோயில் ஆகிய இடங்களில் இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மக்கள் மரங்களின் கீழும், விதியோரங்களிலும் தங்க அந்த அமைப்பு பிளாஸ்டிக் கூடாரங்களை வழங்கியுள்ளது.

4 ஆயிரத்து 669 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 240 பேர் அங்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## கூட்டணி பங்குபற்றாது

இலங்கையின் சுதந்திரப் பொன் விழா தொடர்பான எந்த அமைப்புக்களிலும் கலந்து கொள்வதில்லை என தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் ஒழுங்கு செய்யப்படும் சுதந்திர தின விழாக் கொண்டாட்டங்களுக்குப் பொறுப்பான அமைப்புக்குழுவில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். செல்வராஜா ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருப்பதாக வெளியான தகவல்களில் உண்மை இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## மத்திய கல்லூரி அதிபருக்கு புலமை பரிசில்

இந்திய அரசாங்கம் வழங்கிய கல்லூரி அதிபர்களுக்கான முகாமைத்துவ புலமைப் பரிசிலைப்பெற்று, புதுடில்லியில் நடைபெறும் முகாமைத்துவ பயிற்சியை பெறுவதற்காக யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராஜதுரை அங்கு பயணமானார்.

இரண்டு மாதகாலம் நடைபெறும் இப்பயிற்சிக்கு இலங்கையிலிருந்து இருபது கல்லூரி அதிபர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்டத்திலிருந்து இவர் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டார். (இ-135)

## சந்திரிகா பிரான்ஸ் செல்வார்

கொழும்பு, ஜூலை 21

லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரான்ஸுக்கும் விஜயம் மேற்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இவர் லண்டனில் இருப்பார்.

அதன் பின்பே அவர் பிரான்ஸ் செல்வார் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. ([illegible])

## மணல் இல்லாததால் கட்டட வேலை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சேதமடைந்த பல கட்டடங்கள் புனர்நிர்மாண வேலைகளுக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் அவற்றைத் துரித கதியில் நிறைவு செய்ய முடியாத நிலை உள்ளதாக கட்டடத் திணைக்களத்தினால் கவலை தெரிவிக்கப்பட்டது.

கட்டட புனர்நிர்மாணத்திற்கு வேண்டிய சீமெந்து, கல்லு மற்றும் இரும்புக் கம்பி வகைகள் போதியளவு இருந்தும், இதற்குத் தேவையான மணல் வசதி அற்ற நிலையே இதற்குக் காரணமென தெரிவிக்கப்பட்டது.

பிரதானமாக மாடிக் கட்டடங்களை கட்டுவதற்கு பலம் வாய்ந்த கட்டடங்களாக அமைப்பதற்கு கண்டாவளை மணல் அல்லது பாலியாற்று மணலே தேவையெனவும் —

இம்மணலைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை உள்ளதால் மாடிக் கட்டட வேலைகளைப் பின் தள்ள வேண்டிய நிலை இருப்பதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்த மணலுக்குப் பதிலாக மாற்று நடவடிக்கை ஏதாவது மேற்கொள்ள முடியுமா என ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (இ-15)

## மினிபஸ் கட்டணம் குறைப்பு

தென்மராட்சி, ஜூலை 21

சாவகச்சேரியிலிருந்து பளைக்கும் யாழ்ப்பாணத்துக்குமான மினி பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரியிலிருந்து பளைக்கான ஒரு வழி பயணக் கட்டணம் ரூபா 15இலிருந்து ரூபா 12 ஆகவும் —

யாழ்ப்பாணத்துக்கான ஒரு வழி பயணக் கட்டணம் ரூபா 10இலிருந்து ரூபா 8.00 ஆகவும் குறைக்கப்படுவதாக தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணம் செல்லும் நோயாளர்கள், கப்பல் பயணிகளின் நலன்கருதி காலை 6.45 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து மினி பஸ் புறப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## கால்நடை சினைப்படுத்தும் நிலையங்கள்

கால்நடை சுகாதார திணைக்கள வட்டுக்கோட்டை அலுவலகப் பிரிவில் அராலி, வட்டுக்கோட்டை, மூளாய் ஆகிய பகுதிகளில் கால்நடை சினைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

## இளங்கோ விழா

யாழ்ப்பாணம், ஜூலை 21

ஐம்பெரும் காப்பியங்களை உருவாக்கிய இளங்கோ அடிகளுக்கு, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ் மன்றத்தினர் விழா எடுத்தனர்.

கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் நடத்தப்பட்ட இந்த விழாவை வட்டுக்கோட்டை தென் இந்திய திருச்சபை பேராயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன், கல்லூரி முதல்வர் ஜி. இராசநாயகம் ஆகியோர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

தமிழ் மன்றத் தலைவர் பி. தேவமித்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் இளங்கோ பற்றி பலரும் உரை நிகழ்த்தினர்.

விழாவில் பட்டிமன்றம், வில்லிசை என்பனவும் இடம் பெற்றன. (இ-15)

## மரண அறிவித்தல்

### ஷண்முகரத்தினசர்மா கமலாம்பாள்

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் அர்ச்சகரும், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியருமான ஷண்முகரத்தினசர்மா அவர்களின் அருமை மனைவி கமலாம்பாள் நேற்று முன்தினம் முன்னேஸ்வரத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காந்திமதி, ஷண்முகரஞ்சினி, நளினரஞ்சினி, வள்ளிகாந்தன் (லண்டன்), ஜெயந்திநாதசுப்பிரமணியன் (ஆசிரியர், சிலாபம்), கமலகாந்தமுருகன் (கனடா), தேவமஞ்சரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் முன்னேஸ்வரத்தில் 20-07-1997 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மு. பாலகுருசாமிசர்மா
(சுழிபுரம்)

144, முன்னேஸ்வரம்,
சிலாபம்.

(48495)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவுதியில் சட்ட விரோதமாக தொழில் புரிவோருக்கு தண்டனை

## தேடிக் கண்டு பிடிக்க நடவடிக்கை

சட்ட விரோதமாக நாட்டுக்குள் தங்கி இருட்டுத்தனமாகத் தொழில் செய்வோரை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை சவுதிஅரேபிய பொலீஸார் ஆரம்பித்துள்ளனர்.

போதிய ஆவணங்கள் இன்றி திருட்டுத் தனமாகத் தொழில் புரியும் வெளிநாட்டினருக்கும், அவர்களுக்கு ஆதரவு வழங்குவோருக்கும் ஓராண்டு காலம்வரையான சிறைத் தண்டனை வழங்கப்படும் என்றும், 26 ஆயிரம் டொலர் அபராதம் விதிக்கப்படும் என்றும் சவுதிஅரேபிய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டினுள் சட்ட விரோதமாகத் தொழில் புரிவோர் அடுத்த மூன்று மாத காலப்பகுதியில் தாமாகவே முன் வந்து அதிகாரிகளைச் சந்தித்தால் அவர்கள் தண்டனையில் இருந்து தப்ப முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதியில் தொழில் புரிவோரில் மூன்றில் ஒரு பங்கினர் வெளிநாட்டவர்கள் ஆவர். (ஐ)

# றணரித் எச்சரிக்கை!

அரசியல் குழப்பத்துக்கு தீர்வுகாணும் ஆசியானின் அமைதி முயற்சிகளை ஹுன்சென் நிராகரித்திருப்பது கம்போடியாவில் மீண்டும் உள்நாட்டுப் போர் மூழ வழிவகுக்கும்.

பதவியில் இருந்து விரட்டப்பட்ட முதலாவது பிரதமர் இளவரசர் றணரித் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

பாங்கொக்கில் செய்தியாளர்களிடம் பேசிய இளவரசர் றணரித் ஹுன்செனின் நடவடிக்கைகளைக் கண்டித்தார்.

''ஹுன்செனின் செயலானது உலக அரங்கில் கம்போடியாவைத் தனிமைப்படுத்தி விடும்; அங்கு ஜனநாயகத்துக்கு முடிவு கட்டி விடும்'' என்றும் அவர் எச்சரித்தார்.

# காபூல் மீது குண்டுவீச்சு

ஆப்கானிஸ்தானில் தலிபான் இயக்கத்துக்கு எதிரான படையினரின் விமானங்கள் நேற்று அதிகாலை தலைநகர் காபூல் மீது குண்டுத்தாக்குதல்களை நடத்தியுள்ளன.

''ராடார்'' கருவியின் சமிக்ஞையை அடுத்து உஷாரடைந்த தலிபான் விமான எதிர்ப்புப் பிரிவுகள் உடனடியாகப் பதிற் தாக்குதலை ஆரம்பித்தன. இதனால் தலைநகர் காபூலில் அதிகாலை அமைதி குலைந்தது.

விமான நிலையத்திற்கு அருகாமையிலும் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. இந்த விமானத் தாக்குதல் தொடர்பான சேத விவரங்கள் தெரியவரவில்லை.

★ ரயில் குண்டு வெடிப்புச்சம்பவம்:

# சீக்கிய தீவிரவாதி பஞ்சாப்பில் கைது!

புதுடில்லி, ஜூலை 21

பஞ்சாப்பில் சீக்கியத் தீவிரவாத இளைஞர் ஒருவரைப் பொலீஸார் கைது செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பூட்டா சிங் எனப்படும் இவர் அண்மையில் பஞ்சாப்பில் 39 பேரைப் பலிகொண்டரயில் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய மேலும் சிலரது விவரங்களை இந்த இளைஞர் வெளியிட்டுள்ளார் என்றும்—

அத்துடன் இந்துக்கோயில் ஒன்றைக் குண்டு வைத்துத் தகர்க்கத் திட்டப்பட்டிருந்த திட்டம் தொடர்பாகத் திடுக்கிடும் தகவலை அவர் கூறியுள்ளதாகவும் பஞ்சாப் தலைமைப் பொலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட இளைஞர் ''சர்வதேச சீக்கிய இளைஞர் கூட்டமைப்பு'' என்ற தடைசெய்யப்பட்ட அமைப்பைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

கம்போடிய நாட்டு நெருக்கடிக்குத் தீர்வு காண

# ஆசியானின் மத்தியஸ்தம்; ஹுன்சென் நிராகரித்தார்!

நொம்பென், ஜூலை 21

கம்போடிய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு மத்தியஸ்தம் வகித்து உதவ ''தென்கிழக்கு ஆசிய நாடுகள் சங்கம்'' (ஆசியான்) தெரிவித்த விருப்பத்தை கம்போடியாவின் ஆட்சியிலுள்ள இரண்டாவது பிரதமர் ஹுன்சென் நிராகரித்து விட்டார்.

'ஆசியான்' அமைப்பைச் சேர்ந்த மூன்று நாடுகளின் பிரதிநிதிகள் நொம்பெனில் பிரதமர் ஹுன்செனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

'ஆசியான்' அமைப்போ அல்லது வேறு எந்த வெளி நாடோ கம்போடியாவின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதைத் தாம் விரும்பவில்லை என்று அவர்களிடம் பிரதமர் ஹுன்சென் தெரிவித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

கம்போடிய நெருக்கடிக்குத் தீர்வு காணும் முயற்சி இத்துடன் முடிவுக்கு வந்துள்ளதாக இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் அலி அலாட்டஸ் நொம்பெனில் தெரிவித்தார்.

கம்போடியாவின் அரசியல் குழப்ப நிலைக்கு ஏதாவது தீர்வைக்காணும் முயற்சியாக இந்தக் கட்டத்தில் தலையிடக்கூடாது என்று 'ஆசியான்' பிரதிநிதிகளிடம் பிரதமர் ஹுன்சென் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் ஹுன்செனைச் சந்தித்துப் பேசிய 'ஆசியான்' பிரதிநிதிகள் குழுவுக்கு இவரே தலைமை வகித்துச் சென்றிருந்தார்.

ஹுன்செனைச் சந்திப்பதற்கு முன்னர் 'ஆசியான்' பிரதிநிதிகள் குழுவினர் பாங்கொக்கில் முதலாவது பிரதமர் இளவரசர் நொரடோம் றணரித்தையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். (ஐ-5)

# அமெரிக்காவில் விமானங்கள் மோதின!

தனியாருக்குச் சொந்தமான இரண்டு சிறிய விமானங்கள் அமெரிக்காவில் நேற்று முன்தினம் இரவு ஒன்றுடன் ஒன்று நேரெதிரே மோதிச் சிதறின. இதனால் ஆறுபேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காணாமற் போய்விட்டனர்.

மிகத் தாழ்வான உயரத்தில் பறந்து கொண்டிருந்த சமயமே இந்த விமானங்கள் மோதின. மோதிச் சிதறிய இரு விமானங்களும் மிச்சிகன் ஏரியில் வீழ்ந்தன. அதனையடுத்து ஏரியில் தேடுதல் நடத்திய சுழியோடிகள் ஆறு சடலங்களை மீட்டனர். எஞ்சியிருந்தோரைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்றது. இந்த இரு விமானங்களிலும் மொத்தம் எத்தனை பேர் இருந்தனர் என்பது தெரியவில்லை. (ஐ)

பலகோடி ரூபாவுக்கு வைரச்சங்கிலி

# கமீலாவுக்கு சாள்ஸ் பிறந்த நாள் பரிசு!

லண்டன், ஜூலை 21

இளவரசர் சாள்ஸ் தனது நீண்ட கால நண்பியான கமீலா பார்க்கர் பௌலஸுக்கு ஒரு லட்சத்து 70ஆயிரம் டொலர் பெறுமதியான வைரக்கல் பதித்த சங்கிலியை பிறந்த நாள் பரிசாக வழங்கியுள்ளார்.

கமீலாவின் 50 ஆவது பிறந்த தினமான கடந்த வியாழனன்று இளவரசர் இதனை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கமீலாவின் பிறந்த நாளை முன்னிட்டு மத்திய இங்கிலாந்தில் இளவரசர் சாள்ஸ் நடத்திய விருந்தில் சுமார் 80 விருந்தினர்கள் கலந்து கொண்டனர். இந்தப் பிறந்ததின வைபவம் பற்றி பக்கிங்ஹாம் மாளிகையிலிருந்து எந்தவிதமான கருத்துக்களும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை — இளவரசி டயானா பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றின் உரிமையாளரான முகமது சுல்சயாத்துடன் பிரான்ஸில் விடுமுறையைக் கழித்து வருகிறார். (ஐ-5)

## ஜப்பானில் அணுக்கசிவு

ஜப்பானில் உள்ள உலகிலேயே மிகப் பெரிய அணுமின் ஆலையில் மீண்டும் கதிர்வீச்சுக் கசிவு ஏற்பட்டிருக்கிறது.

கடந்த நான்கு நாள்களில் ஏற்பட்ட இரண்டாவது அணுக் கதிர்கசிவு இதுவாகும்.

மூன்று லீற்றர் வரையிலான அணுக் கதிர் வீச்சுப் பொருளே கசிந்தது என்றும் அதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டில் ஜப்பானில் இரண்டு அணுசக்தி விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

# ஐ. ஆர். ஏ. இயக்கம் சண்டை நிறுத்தம்!

## நேற்று நண்பகல் முதல் அமுலுக்கு

டப்ளின், ஜூலை 21

வட அயர்லாந்தில் சமாதானத்தை நிலைநாட்ட வாய்ப்பளிப்பதற்காக மீண்டும் யுத்த நிறுத்தம் செய்வதாக ஐரிஷ் குடியரசு இராணுவம் (ஐ. ஆர். ஏ) அறிவித்துள்ளது.

ஐ. ஆர். ஏ. இயக்கம் அறிவித்த போர் நிறுத்தம் நேற்று நண்பகல் முதல் அமுலுக்கு வந்தது.

வட அயர்லாந்தில் நீண்ட நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்யும் நோக்குடன் யுத்த நிறுத்தம் செய்யப்படுவதாக டப்ளினில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் ஐ. ஆர். ஏ. தெரிவித்துள்ளது.

ஐ. ஆர். ஏயின் போர்நிறுத்தம் நேற்று ஞாயிறு நண்பகல் 12 மணி முதல் அமுலுக்கு வந்தது.

வட அயர்லாந்தில் பிரிட்டனின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவருவது என்ற தமது நிலைப்பாட்டில் இன்னமும் உறுதியாக இருப்பதாகவும்—

வட அயர்லாந்து வன்முறைக்குக் காரணமே பிரிட்டனின் ஆட்சி தான் என்றும் தனது அறிக்கையில் ஐ. ஆர். ஏ. சுட்டிக் காட்டியுள்ளது.

ஐ. ஆர். ஏயின் அரசியல் பிரிவான 'சின்பீன்' விடுத்த வேண்டுகோளை ஏற்றே ஐ. ஆர். ஏ. போர் நிறுத்தம் செய்ய உடன்பட்டுள்ளது.

முன்னர் 1994ஆம் ஆண்டில் போர் நிறுத்தம் செய்த ஐ. ஆர். ஏ. பின்னர் 96ஆம் ஆண்டில் பெப்ரவரி மாதம் லண்டனில் நடத்திய குண்டுத் தாக்குதலுடன் அப்போர் நிறுத்தத்தை முறித்துக் கொண்டது.

ஐ. ஆர். ஏயின் தற்போதைய போர் நிறுத்த அறிவிப்பை பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் வரவேற்றுள்ளார்.

போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தவுடன் சின்பீனுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்படும் என்றும்— லண்டனில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருப்பதை அடுத்து எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஐ. ஆர். ஏயின் அரசியல் பிரிவான சின்பீனும் கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போதைய போர் நிறுத்தத்தை ஐ. ஆர். ஏ. எப்படி கடைப்பிடிக்கப்போகிறது என்பதைப் பொறுத்தே இது வெற்றி பெறும் என்று அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ-4)

## கச்சதீவு மீட்பு மாநாடு

இராமேஸ்வரம், ஜூலை 21

திராவிடக்கழகப் பொதுச் செயலாளர் வீரமணியின் தலைமையில் அடுத்த சனிக்கிழமை இராமேஸ்வரத்தில் கச்சதீவு மீட்பு மாநாடு ஒன்று நடத்தப்பட உள்ளது.

இந்த மாநாட்டில் திராவிடக்கழகம், அ.இ.அ.தி.மு.க., மறுமலர்ச்சி தி.மு.க. மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி ஆகியன பங்குபற்றவுள்ளன.

கச்சதீவை அண்டிய கடற் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கலாமென கச்சதீவு உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இலங்கை அரசு அந்த ஒப்பந்தத்தை மீறிவருவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்த மாநாட்டிலும் அதையொட்டிய பேரணியிலும் சுமார் 25 ஆயிரம் பேர் பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10-21)

## சவுதியில் ஏவுகணை பரிசோதனை

றியாட், ஜூலை 21

தரையில் இருந்து செலுத்தப்படும் ஏவுகணைகளை சவுதிஅரேபியா பரீட்சித்துள்ளது. சவுதிஅரேபியாவில் தயாரிக்கப்பட்ட இந்த ஏவுகணைகளைப் பரீட்சிக்கும் நடவடிக்கைகளை சவுதி பாதுகாப்பு அமைச்சர் இளவரசர் சுல்தான் நேற்று முன்தினம் ஆரம்பித்துவைத்தார்.

60 கிலோ மீற்றர் தூரம் சென்று இலக்குகளைத் தாக்கும் சக்தி கொண்டவை இந்த ஏவுகணைகள். (ஐ)

## அமெரிக்காவில் புயல் காற்று!

நியூயோர்க், ஜூலை 21

அமெரிக்காவின் தென்பகுதியைத் தாக்கிய புயலுக்கு இருவர் பலியாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மணிக்கு 120 கிலோமீற்றர் என்ற வேகத்தில் புயல் வீசியதாக பொலீஸார் தெரிவித்தனர்.

லூசியானா, மிசுசிப்பி, அலபாமா, புளொறிடா ஆகிய மாநிலங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. அலபாமாவின் சிலபகுதிகளில் நெருக்கடிநிலை பிரகடனப் படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு T.V.

20 20 Sony, 20 22Sony, 14'' கறுப்பு வெள்ளை நஷனல் (பெட்டியுடன்) 12'' கறுப்பு, வெள்ளை, இன்னும் பல T.V. விற்பனைக்குண்டு: வீனஸ் தனபாலசிங்கம், (Electronic Engineering London) V.C.R. 284, ஸ்ரான்லி வீதி (நாகவிகாரை முன்பாக), யாழ்ப்பாணம். [48433]

### தவறிவிட்டது

முருகேசு கனகரத்தினம் என்பவருடைய 622553465V இலக்க தேசிய அடையாள அட்டை 17-7-97 வியாழக்கிழமை அன்று சங்கானையிலிருந்து கொடிகாமம் செல்லும் போது தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் உயரப்புலம் (பிள்ளையார் கோயிலடி), ஆனைக்கோட்டையில் தயவு செய்து ஒப்படைக்கவும். [48485]

செல்லையா கிருசாந்தன் (0903020322) ஆகிய எனது அடையாள அட்டை இணுவிலுக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புத்தூர்கிழக்கு, புத்தூர்என்ற விலாசத்திற்கு அறியத்தரவும். [48489]

### நாடகம் எழுதுவது எப்படி?

இந்த நூலை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாடகங்கள் பல ஒவ்வொரு மாதமும் வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன; அதன் இரகசியம் ரூபா 50, 'அக்கரைச்சீமையில்' ரூபா 25, தொடர்பு: No. 30: கடைச்சாமி வீதி, யாழ்ப்பாணம். [48453]

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

12. 07. 97 அன்று நவாலி வீதியில் சங்கரத்தைச் சந்திக்கும், துணைவிச்சந்திக்கும் இடையில் தங்க ஆபரணமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் பெற்றுக் கொள்ளவும். (48467)

### மணப்பெண் தேவை

59ஆம்ஆண்டு பிறந்த மிருகசீரிடநட்ஷேத்திரமுடைய 8-ல் செவ்வாய் குற்றமுள்ள ஆணுக்கு தகுந்த அழகான மணப்பெண் தேவை: தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (48462)

ஜேர்மனியில்12வருடமாகத் தொழில் புரியும் செவ்வாய் குற்றமற்ற ரோகிணிநட்ஷேத்திரமுடைய ஆணுக்கு தகுந்த மணப்பெண் தேவை. அத்தோடு சகல உத்தியோகத்திலும் மணமக்கள் உண்டு. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, யாழ் நாவலர் வீதி. (48463)

### விற்பனையாகின்றது

இந்து நாகரிகம் i, ii 1997 ஆம் ஆண்டுக்கான A/L பரீட்சைக்கமைவான மாதிரி வினாவிடை வடிவிலமைந்தது. புதிய பதிப்பு:- ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (48450)

### திருத்துதல்

T.V. றேடியோ, மணிக்கூடுகள் திருத்திக் கொடுக்கப்படும். வீனஸ் தனபாலசிங்கம், (Electronic Engineering, London) V.C.R. 284, ஸ்ரான்லி வீதி, நாகவிகாரை முன்பாக), யாழ்ப்பாணம். (48494)

## தொற்று நோய்

குடாநாட்டில் வெப்பம் அதிகரித்து வருவதால் கோழிகளுக்கு தொற்று நோய் பரவி வருகிறது. கோழிகள் தாக்க நோயினால் இறக்கின்றன. (ஐ-15)

---

# JAFFNA COLLEGE

## WANTED

### TEACHERS TO TEACH COMPUTER AND ELECTRONICS

A Degree in Computer Science is Preferable Apply Befor 1st of August 1997 to the Principal Jaffna College, Vaddukoddai. [C/1151]

---

# சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்

## பழைய மாணவர் சங்கம்

### வருடாந்த ஒன்று கூடலும் பொதுக்கூட்டமும்

சங்கத்தின் 85 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் **02'- 08 - 1997** சனிக்கிழமை கல்லூரியின் பீற்றோ மண்டபத்தில் நடைபெறும். இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர்களின் துணை சகிதம் அழைக்கின்றோம்.

**PROGRAMME FOR THE DAY**

7.30 a. m. - Holy Communion Service.
8 45 a. m. - Breakfast
9.30 a m. - Annual General Meeting.

**Agenda**

1. Prayer.
2. Vote of Condolence.
3. Minutes of the last A G M.
4. Principal's Review.
5. Annual Report.
6. Statement of Accounts.
7. Resolutions & Motions.
8. Election of Office Bearers.
9. Any other business.

10.30 a. m. - Cricket Match - Old Boys Vs Present Boys.
1 30 p. m. - Fellowship Lunch.
2.00 p. m - Cricket Match (Continued)
4 00 p m. - Principal's Tea.
4.30 p. m. - Football Match- Old Boys Vs Present Boys.

போசனங்களில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் **31 - 07 - 1997** இற்கு முன்னதாக காலைப் போசனம் ரூபா 30, மதிய போசனம் ரூபா 70ஐ கல்லூரியில் பொருளாளர் திரு. நந்தகுமாரிடம் செலுத்துமாறு வேண்டுகிறோம்.

தபால் அழைப்பு இல்லாததால் சகல அங்கத்தவர்களும் இதனை அழைப்பாக ஏற்று சமுகமளிக்கும் படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

S. THANAPALAN, PRINCIPAL.
A. J KADIRGAMAR, HONY. SECRETARY.
(48459)

---

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 10 — 09 — 1938



உதிர்வு: 21 — 07 — 1990

திருமதி
## பிறிஞ்சி சறோஜினி ஜெயராஜா

கருத்தூன்றிக் குடும்பத்தைக்
கவனிக்குந் தாயானாய்!
பொருத்தமுறும் மனையாளாய்ப்
பொழுதெல்லாம் எனையாண்டாய்!
அர்த்தங்கள் பல சொல்லும்
அன்பே! உன் இல்வாழ்வு
ஆண்டாண்டு கடந்தாலும்,
அகலாது உன் நினைவு.

அன்புடன் நினைவு கூரும்:
[illegible]

பிரதான வீதி,
வட்டுக் கோட்டை. (48492)

---

# யாழ்.வரதயார் நிலையில் கொழும்பில் கப்பல்கள்

வவுனியா, ஜூலை 21

சஜிந்த, ஹெந்தல, மொன்றியா ஆகிய கப்பல்களில் வடபகுதிக்கான பொருள்கள் ஏற்றப்பட்டு ஆயத்த நிலையில் அக்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கப்பல் போக்குவரத்துத் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் முடிவு இன்னும் ஓரிரு தினங்களில் தெரியவரும் எனவும் அதைத் தொடர்ந்து இக்கப்பல்கள் அவற்றின் பயணத்தை ஆரம்பிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை அரசினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ''சஜிந்த'' கப்பல் யாழ். திருமலை பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. அக்கப்பலின் குத்தகைக் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து அக்கப்பல் பொருள்களை ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ''சஜிந்த'' கப்பலுக்குப் பதிலாக யாழ். திருமலை பயணிகள் கப்பல் சேவைக்குப் பயன்படுத்த ''அட்லான்டிக் ஓஷன்'' என்ற கப்பல் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது (இ-10-164)

---

மீண்டும் யாழ். நகரில்

# ஜெயா அழகுமாடம்

மீண்டும் யாழ். நகரில்
இல. 79 / 1AA கஸ்தூரியார் வீதியில்

தனது சில்லறை/மொத்த வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

# ஜெயா அழகு மாடம்

இல 79 / 1AA, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(48490)

---

# காவலாளி தேவை


யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை அச்சகத்திற்கு இரவுக் காவலாளி தேவை. விரும்புவோர் தேசிய அடையாள அட்டை, சான்றிதழ்களுடன் 23 - 07 - 97 புதன்கிழமை பி.ப 1.00 மணிக்கு இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைக்கு சமுகமளிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

சு. சிவசுப்பிரமணியம்,
மாவட்டச் செயலாளர்.

இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி/1160)

---

# முதலாம் ஆண்டு நினைவு



## அமரர் விசுவர் குமாரசாமி

(அரசாங்க லிகிதர்,
யாழ். தொல்புரம் விக்னேஸ்வரா
பகுதிநேர ஆங்கில ஆசான்)

பிறப்பு: 1937- 10- 31
இறப்பு: 1996- 08- 01

காலமெல்லாம் எம் காவல்
கானகத்தே காற்றில்போனமையில்
கலங்கித் தவிக்கிறோம்
காலங்கள் போனாலும்
கல்லாய் பதிந்த நினைவுகளுடன்.

-குடும்பத்தினர்

மூளாய் மேற்கு,
மூளாய். (48400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் திணைக்களத்தை அரசு கூட்டுத்தாபனமாக்க அனுமதியோம்!

## அஞ்சல் சேவையாளர் சங்கம் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 21

''தபால் திணைக்களத்தை கூட்டுத்தாபனமாக்குவதையோ அல்லது தனியார் மயப்படுத்துவதையோ அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டாது.''

அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கத்தின் செயலாளர் என். பி.ஹெற்றியாராச்சிஇவ்வாறு தெரிவித்தார்.

அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை ஏற்பாடு செய்திருந்த 3 நாள் மாநாட்டின் இறுதி நாளான நேற்று முன்தினம் யாழ். பிரதம தபாலகத்தில் மேற்படி சங்கத்தின் 37 ஆம் வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடபிரதேச பிரதி தபால் மா அதிபர் எஸ். மாணிக்கவாசகர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இம் மாநாட்டில்அஞ்சல் தொலை தொடர்பு சேவையாளர் சங்கத்தின்பிரதி பிரதம செயலாளர் ஜயரத்தின பண்டார மற்றும் பத்திராதிபர் பி. மானகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் செயலாளர் என்.பி, ஹெற்றியாராச்சி உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது:-

தொலைபேசித் திணைக்களம் தனியார்மயமாக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் இன்னும் எமது உணர்வலைகளை விட்டு நீங்கவில்லை. எனவே மீண்டும் ஒருமுறை இத்தகைய இழப்புக்களை தாங்கிக் கொள்ள முடியாது.

இந்த தனியார் மயப்படுத்தல் திட்டமானது ஐக்கிய தேசியக் கட்சி காலத்திலேயே முன்வைக்கப்பட்டது. அப்போது இதனை முழுமையாக எதிர்த்த இந்த அரசாங்கம் தற்போது இதனை அமுல் செய்வதை எந்த வகையில் நியாயப்படுத்தப் போகின்றது?

அமைச்சர் மங்கள சமரவீரவும் அஞ்சல் அதிபர் நாயகம் திருமதி சோமா கொட்டகதெனியாவும் அஞ்சல் திணைக்களத்தைப் பற்றிய மிகச் சிறிய அறிவை மட்டும் கொண்ட சில ஆலோசனையாளர்களின் வழிநடத்தலின் கீழ் அஞ்சல் திணைக்களத்தை கூட்டுத்தாபனமாக்குவதை நாம் எப்போதும் ஏற்றுக் கொள்ள முடியாது — என்றார்.

(ஐ)

# நல்லூர் உற்சவகால ஏற்பாடுகள் ஆரம்பம்

திருநெல்வேலி, ஜூலை 21

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டிய ஏற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கடந்த புதன்று யாழ். மாநகர ஆணையாளரின் பணிமனையில் நடைபெற்றது.

உற்சவ காலத்தில் பக்தர்களின் நலன்கருதி வழமை போன்று விசேட ஒழுங்குகளை மேற்கொள்வது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாநகர ஆணையாளர் வெ. பொ. பாலசிங்கம் இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படை, சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச்சங்கம் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து மற்றும் வீதி ஒழுங்குகள் தொடர்பாக இறுதி முடிவு எடுப்பதற்காக எதிர்வரும் 4 ஆம் திகதி மற்றொரு கூட்டம் யாழ். மாநகர ஆணையாளரின் பணிமனையில் நடைபெறவுள்ளது.

(ஐ-135)


**பாலர் ஆசிரியராக..**

மேற்படி பயிற்சி பெற க.பொ.த.(சா/த) தகைமையுடையோரும், மேல் தகைமையுடையோரும் தபால் வழியில் ஆறுமாதத்தில் பயிலலாம்.

**பாலர் ஆசிரியர் சங்கம்**

20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(47335)


## பரீட்சை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டங்களில் 2 ஆம் தவணைப் பரீட்சை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாவதாக பரீட்சைக் குழுவினர் அறிவித்துள்ளனர். இன்று ஆண்டு 11 மாணவருக்கு தமிழ்ப் பாடப் பரீட்சை நடைபெறும் என்றும், ஏனைய ஆண்டுகளுக்கான பரீட்சைகள் நாளை மறுதினம் புதன்கிழமை முதல் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இன்ரறெக்ட் செய்தி மலர்

திருநெல்வேலி, ஜூலை 21

யாழ். இந்து மகளிர் கல்லூரி இன்ரறெக்ட் கழகம் ''செய்தி மலர்'' ஒன்றை வெளியிடத் தீர்மானித்துள்ளது.

ஏனைய பாடசாலைகளின் இன்ரறெக்ட் கழகங்களின் செய்திகள், தகவல்களையும் உள்ளடக்கியதாக இந்த செய்தி மலர் வெளியிடப்படவுள்ளது.

இதேவேளை— இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவியருக்கு பாத அணிகளை இலவசமாகப் பெற்றுக் கொடுக்கவும் இன்ரறெக்ட் கழகம் திட்டமிட்டுள்ளது.

(ஐ-135)

## விவசாயிகள் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, ஜூலை 21

கொடிகாமம் பகுதி விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு கடந்த திங்கட்கிழமை கொடிகாமம் அ. த. க. பாடசாலையில் கிராம அலுவலர் க. தங்கமயிலோன் தலைமையில் நடைபெற்றது.

சாவகச்சேரி கமநல சேவை நிலைய விவசாய போதனாசிரியர் பிறின்ஸ் பொன்னுத்துரை மற்றும்யாழ். மாவட்ட விவசாய போதனாசிரியர் உட்படப் பலர் உரையாற்றினர்.

(ஐ-117)

## கனடா அதிகாரி கருத்து

இலங்கையின் இனப்பிரச்சினையை ஓர் உள்நாட்டு விவகாரமாகவே கருதுகிறோம். போரில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரின் விருப்பத்தின் பேரில் மத்தியஸ்தம் செய்ய அழைக்காதவரை கனடா எந்தவொரு தரப்பின் பக்கச்சார்பாக இப்பிரச்சினையில் தலையிடாது.

கொழும்பில் உள்ள கனடா உயர்ஸ்தானிகராலய அபிவிருத்தி ஆலோசகர் மானி கிர்வான் மட்டக்களப்பில் நடந்த வைபவம் ஒன்றில் உரையாற்றியபோது இவ் வாறு தெரிவித்தார்.


சக்திவாய்ந்த கச்சிதமான நம்பகரமான

# "டென்யோ" ஜெனரேட்டர்





**கையிருப்பிலிருந்து மாதிரிகள் கிடைக்கும்**

★ 6. 5 கேவிஏ ஓசை குறைந்த (SOUND PROOF) டீசல், 3 பேஸ், சுயமாக இயங்கக் கூடியது ரூபா 2,75, 000/-

★ 2. 3, 2. 8, 3. 3, 3, 9 சிங்கிள் பேஸ் டீசல் என்ஜின் சுயமாக இயங்கக்கூடியது — ரூபா 75, 000/- மேல்

★ 2 கேவிஏ பெற்றோல் ரூபா 45, 000-/

கிடைக்குமிடம்:

**N. M. L. TRADERS**

என். எம். எல். டிரேடர்ஸ்

85, கொட்டா வீதி, பொரல்ல,
கொழும்பு - 8

தொலைபேசி எண்: 693617 பக்ஸ்: 500737

(சி/842)




# வெளிநாட்டுக் கடிதங்களில் இடம்பெறும் குளறுபடிகள்

## விலாச தாரர்கள் பலர் ஏமாற்றம்

திருநெல்வேலி, ஜூலை 21

கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட வெளிநாட்டுக் கடிதங்களைப் பெற்றுக் கொண்ட சில விலாசதாரர்களுக்கு பெரும் ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

கடிதத்தின் உறையில் தங்கள் முகவரியைக் கண்டு ஆவலுடன் கடிதத்தைப் பிரித்த போது உள்ளே தமக்குச் சம்பந்தமில்லாத வேறு எவருக்கோ எழுதப்பட்ட கடிதம் இருப்பது கண்டு அவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து வரும் வெளிநாட்டுக் கடிதங்களில் அடிக்கடி இத்தகைய குளறுபடிகள் இடம் பெறுகின்றன.

புகைப்படங்களுடன் அனுப்பப்பட்டகடிதங்கள்சில வற்றில் புகைப்படங்கள் மட்டுமே இருந்ததாகவும், அவற்றுடன் எழுதி வைக்கப்பட்ட கடிதங்கள் காணாமற்போயுள்ளதாகவும் சில விலாசதாரர்கள் கூறியுள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து குடாநாட்டுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் கொழும்பில் உடைத்து சோதனையிடப்பட்ட பின்னரே இங்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

நீண்ட காலமாக இந்த நடைமுறை தொடர்ந்து அமுலில் இருந்து வருகிறது.

பரிசோதனைக்காக உடைக்கப்படும் கடிதங்கள் மீண்டும் உறைகளில் இடப்பட்டு 'கிளிப் பண்ணப்படுகின்றன. இவ்வாறு செய்யும்போது பல குளறுபடிகள் இடம்பெறுவது தெரியவருகிறது.

# கொள்ளையர் கும்பல் கல்முனையில் கைது!

கொழும்பு, ஜூலை 21

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புவோரை அவர்களது சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்வதாகக்கூறி இடை நடுவில் அவர்களது பணத்தை கொள்ளையடிப்பதில் ஈடுபட்டு வந்த கும்பல் ஒன்றை கல்முனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து வருவோரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து அழைத்துச் சென்று வழியில் கொள்ளையில் ஈடுபடுவதுடன் பெண்களை மானபங்கம் செய்யும் நடவடிக்கையிலும் இவர்கள் ஈடுபட்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது.

(ஐ)

# முதலாம் ஆண்டு ஓயாத நினைவலைகள்



தாயின் மடியில்: **26-03-1989**

நோயின் பிடியில்: **21-07-1996**

## செல்வி தினேஷா யோகராசா

(2ஆம் ஆண்டு மாணவி நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்)

பால் மணம் மாறாத பிஞ்சுகள், உங்களை அப்பா அம்மா எப்படிவளர்த்தார் குஞ்சுகள்? நாள் தோறும் இல்லாமல் போனீர்கள் நாளை வருவீர் எங்கள் வீட்டில் பன்னிரண்டு மாதங்களாய் பால் மணம் எங்கே போகின்றாய்? அன்னந் தண்ணீர் இல்லாமல் இந்த இளந் தென்றல் எங்கே போகின்றாய்? அண்ணன், தங்கை, தம்பி இல்லாமல் இவர்கள் இந்த மண்ணை விட்டு எங்கே போகின்றார்? என்னை நினைத்து கலங்காதீர்கள், நான் இறைவனின் பூக்கள். அமைப்பும், அழைப்பும் ஆண்டவருடைய நியதி. அதை யாராலும் மாற்ற முடியாது. இந்தப் பிறவியில் மகளாக இல்லாவிட்டாலும் அடுத்த பிறவியில் மகளாக வருவேன் நீங்கள் கலங்காதீர்கள் — தினேஷா.

— குடும்பத்தினர்

வாலை அம்மன் வீதி,
அம்பாள் வெதுப்பகம்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(48496)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸ் மாநாட்டில் புலிகளுடன் பேச்சு நடத்த அரசு முயற்சியா?

## அரசாங்கப் பேச்சாளர் மறுப்பு

கொழும்பு, ஜூலை 21
எதிர்வரும் 28 ஆம் திகதி சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் நடைபெறவுள்ள சர்வதேச விழிப்பு மாநாட்டில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த பிரதிநிதிகள் குழு ஒன்றை அனுப்பியுள்ளதாக வெளியான செய்திகளை அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் உத்தியோகபூர்வமாக மறுத்துள்ளார்.

உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ விடுதலைப் புலிகளுடன் உத்தியோகபூர்வமற்ற முறையில் பேச்சு நடத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று அந்த அரசாங்கப் பேச்சாளர் கூறியதாக 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் எம்.பிக்கள் எவரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை—தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினரான இ. சம்பந்தன் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட தங்கத்துரையின் இடத்துக்கு எம். பியாக நியமிக்க முடிவு செய்யப்பட முன்னரே இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கான அழைப்பு அவருக்குக் கிடைத்ததால் அவர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார் என்றுசர்வதேச விழிப்பு இயக்கத்தின் கொழும்புப் பிரதிநிதி தெரிவித்துள்ளார். (ஐ-150)

## 5 மாதமாக ஊதியம் இல்லை

நல்லூர், ஜூலை 21
யாழ்ப்பாணம் தொல்பொருள் நிலைய ஊழியர்களுக்கு கடந்த ஐந்து மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் இதுவரைவழங்கப்படவில்லை.

அனுராதபுரத்தில் உள்ள பிராந்திய அலுவலகத்துடன் பலதடவைகள் தொடர்பு கொண்டும் கூட பயனில்லாமல் போய்விட்டதாக ஊழியர்கள் தெரிவித்தனர். (ஐ-103)

## விவரம் சேகரிப்பு

சாவகச்சேரி கமநலசேவைப் பகுதிக்கு உட்பட்ட பிரிவுகளில் உருளைக்கிழங்கு பயிரிடப்படவுள்ள விவசாயிகள் தமக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கின் விவரத்தினை மீசாலை வடக்கு கமநலசேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு பெரும்பாக அலுவலர் அறிவித்துள்ளார். (ஐ-117)

# வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் குளிர்சாதனப் பெட்டி இல்லை!

## ஊசி மருந்துகள் பழுதடையும் ஆபத்து

யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ். போதனாவைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் ஊசிமருந்து ஏற்றும் பகுதியில் பாவனையில் இருந்து வந்த குளிர்சாதனப் பெட்டி பழுதடைந்திருப்பதனால் அங்கு குளிர்சாதன முறையில் பாதுகாக்க வேண்டிய மருந்துவகைகளை வைத்துப் பராமரிப்பதில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் தினமும் சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ள இக்கால வேளையில், ஏற்புத்தடை ஊசிமருந்து போடவரும் நோயாளர்களுக்கு முறைப்படி பாதுகாக்கப்படாத ஊசிமருந்தையே ஏற்றும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இங்கு ஏற்புத்தடுப்பூசி மருந்து குளிர்சாதனப் பெட்டிக்குப் பதிலாக பனிக் கட்டிகளுக்குள் வைத்தே பேணப்படுகிறது. வெப்பம் அதிகரித்து வரும் இக்கால வேளையில் பனிக்கட்டியின் உறைநிலை நீடித்து இருக்க வாய்ப்பில்லை.

இதனால் ஊசி மருந்தை உரியபடி பேணப்படாத நிலையிலேயே நோயாளர்களுக்கு ஏற்றப்படுகின்றன.

கடந்த சுமார் ஆறுமாதங்களுக்கு மேலாக மின்சாரக் கோளாறு காரணமாகப் பழுதடைந்த நிலையில் இருக்கும் இக்குளிர்சாதனப் பெட்டி இன்னமும் திருத்தியமைக்கப்படாத நிலையில் இருப்பதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக வெளி நோயாளர் பிரிவிலிருந்து தெரியவருகிறது. (ஐ)

## 'வணிகவனிதை' வெளியீட்டு விழா

திருநெல்வேலி, ஜூலை 21
யாழ் இந்து மகளிர் கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் ''வணிக வனிதை'' சஞ்சிகையின் வெளியீட்டு விழா கடந்த வாரம் சிறப்பாக நடைபெற்றது. வர்த்தகமாணவர் ஒன்றிய தலைவி செல்வி க. யாழினி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத் துறை தலைவர் மா. நடராஜசுந்தரம் கலந்து கொண்டார். யாழ். கல்வி வலயம் ஒன்றின் வணிககல்வி விசேட அலுவலர் வ.க.பார்த் சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (ஐ-135)

# சங்கிலி மன்னன் சிலை புனரமைக்கப்படும்

## மாநகர சபை நடவடிக்கை

திருநெல்வேலி, ஜூலை 21
நல்லூர் கிட்டு பூங்காவுக்கு அருகில் உள்ள யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் கடைசி மன்னன் சங்கிலியனின் உருவச் சிலை யாழ் மாநகர சபை நிர்வாகத்தினால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. குதிரை மீது வாளுடன் சங்கிலியன் இருக்கும் இச்சிலை 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

'ரிவரெஸ' இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் இச்சிலை சேதமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை — நல்லூரில் உள்ள சுப்பிரமணியபாரதியாரின் உருவச்சிலை அப்பகுதி மக்களின் உதவியுடன் வர்ணம்பூசி மெருகூட்டப்பட்டுள்ளது. (ஐ-135)

# கிருசாந்தி கொலை வழக்கு: எதிரிகளின் பிணை மனு நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 21
கைதடியைச் சேர்ந்த செல்வி கிருசாந்தி குமாரசாமியைக் கற்பழித்துக் கொலை செய்தது மற்றும் அவரது தாய், சகோதரன், அயலவர் ஆகியோரைக் கொலை செய்தது தொடர்பாக குற்றஞ் சுமத்தப்பட்ட 9 படையினருக்கும் கடந்த வெள்ளிக்கிழமை ''ட்ரயல் அற் பார்'' நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்டது.

எதிரிகளைப் பிணையில் விடுவிக்கக் கோரி மனுசமர்ப்பிக்கப்பட்ட போது அரச தரப்புச் சட்டத்தரணியான செல்வி பிரசாந்தி மஹிந்தரத்ன ''எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்டால் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பைச் சேர்ந்த சாட்சியங்களைப் பயமுறுத்தும் வாய்ப்பு எதிரிகளுக்கு உள்ளது. தேவை ஏற்படின் சட்டத்தரணிகள் எதிரிகளைச் சிறைச் சாலையில் சந்திக்கலாம்'' என்று தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களின் நலனைக் கவனித்து வரும் சட்டத்தரணி குமார் பொன்னம்பலமும் எதிரிகள்பிணையில் விடுவிக்கப்படுவதை ஆட்சேபித்தார்.

இதனைத் தொடர்ந்து பிணை மனு நிராகரிக்கப்பட்டது.

இந்த வழக்கு செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அன்றிலிருந்து இவ்வழக்குத் தினமும் விசாரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்குக் கண்டனம்

சென்னை, ஜூலை 21
தமிழ்நாட்டின் வேதாரணியம் அருகே இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டு தமிழக மீனவர்கள் இரண்டு பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து போட்டி அ. இ. அ. தி.மு.க. பொதுச் செயலாளர் எஸ். திருநாவுக்கரசு கண்டனம் தெரிவித்திருக்கிறார். திருச்சியில் சனியன்று அவர் செய்தியாளர் களிடம் இது குறித்து தெரிவித்தார்.

அதேசமயம் வேதாரணியம் அருகே தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை சுட்டுக் கொன்றதை ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியும் கண்டித்திருக்கிறார்.

இந்திய மீனவர்கள் மீது தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் இத்தகைய தாக்குதல்களை தடுக்க முதலமைச்சர் மு. கருணாநிதி உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

# நிரந்தரமாக தங்கி உள்ளோருக்கு பாதுகாப்பு அடையாள அட்டை

## வவுனியாவில் வழங்கப்படுகிறது

வவுனியா, ஜூலை 21
வவுனியாவில் நிரந்தரமாக வாழும் மக்களுக்கு தற்போது பாதுகாப்பு அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

1993 ஆம் ஆண்டு தேர்தல் இடாப்பில் பதியப்பட்டோரே இவ் விடயத்தில் நிரந்தர வாசிகள் எனக் கருதப்பட்டு அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அடையாள அட்டை ஒன்றைத் தயாரிக்க அரசுக்கு 81 ரூபா செலவாகிறதெனவும் எனினும் அவை இலவசமாகவே வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10-1)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலய வருடாந்த திருவிழா கடந்த வெள்ளியன்று ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தினமும் மாலை 5. 30 மணிக்கு திருச்செபமாலையுடன் வழிபாடு நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயிலில் நாளை செவ்வாய்க்கிழமை பகல் விசேட சங்காபிஷேகமும் மாலையில் வைரவர் பொங்கலும் இடம் பெறவுள்ளன. (ஐ-30)

# யாழ். பஸ்வண்டிகளில் திருக்குறள்வாசகங்கள்

திருநெல்வேலி ஜூலை 21
யாழ்ப்பாணத்தில் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகளில் திருக்குறள் வாசகங்கள் கொண்ட வர்ண அட்டைகள் பொருத்தப்படவுள்ளன.

பஸ் வண்டிகளில் திருக்குறள் வாசகங்களைப் பொறிப்பதற்கு அனுமதி கேட்டு 'மில்க்வைற்' நிறுவன அதிபர் சிவ நெறிப்புரவலர் க. கனகராசா வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளருக்கு அண்மையில் கடிதம் எழுதியிருந்தார். அவரது வேண்டுகோளுக்கு வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொதுமுகாமையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதனையடுத்து 'மில்க்வைற்' நிறுவனத்தின் உதவியுடன் திருக்குறள் வாசகங்களும் அவற்றுக்கான விளக்கங்களும் கொண்ட வர்ண அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றை பஸ் வண்டிகளின் உட்புறத்தில் ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

# தனது சமகாலத்தின் அறவலுவை நல்லகவிஞன் வெளிப்படுத்துகிறான்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

நல்லூர், ஜூலை 21
''ஒரு சிறந்த கவிஞன் தனது சமகாலத்தின் அறவலுவையும், பண்பாட்டு வலுவையும் எடுத்துக்காட்டுபவனாக விளங்குகிறான்.''

மூத்த எழுத்தாளர் க. சொக்கலிங்கம் (சொக்கன்) இவ்வாறு கூறினார்.

மூத்த எழுத்தாளர் வரதரின் ''யாழ்ப்பாணத்தார் கண்ணீர்'' என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த சனியன்று நல்லை ஆதீனத்தில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சொக்கலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் நாம் அனுபவித்த துயரங்களை விட இன்று நாம்எவ்வளவோ அவமானங்களைத் தாங்கிக் கொண்டிருக்கின்றோம். தெருக்களில் நாம்படும் அவமானங்கள் கண்ணுள்ளவர்களைப் பிடுங்கி எறியுமளவிற்கு. இதயம் உள்ளவன் அது இருக்கிறதா என்று எண்ணும் அளவிற்கு இடம் பெறுகின்றன. இவைகள் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

பதின் நான்கு ஆண்டுகால கண்ணீர்க் கடலின் ஒரு சிறு துளியான இந்நூல் இனிவரப் போகும் துயரங்களைக் கூறுவதற்கான ஒருதொடக்கமே. வரதரின் இந்நூலைத் தொடர்ந்து இப்போதைய எழுத்தாளர்கள் தொடர வேண்டிய பணிகள் என்ன என்பதை அவர்களே முடிவு செய்ய வேண்டும் -என்றார்.

பேராசிரியர் சண்முகதாஸ் தனது தலைமை உரையில் கூறியதாவது:-

நாம் இடம் பெயர்ந்து சென்ற நிலை. அனைவரும் பட்ட துன்பங்கள், அனுபவங்களைக் கூறும் யாழ்ப்பாணத்தார் கண்ணீர் என்ற இந்த நூல் நாம் எல்லோருமே ஒருவகையில் தொடர்புடைய எமது வாழ்க்கையைத் திரும்பிப் பார்ப்பது போல் அமைகிறது. பாடல்களின் சந்தங்கள் பொருத்தமாக, லாபகமாக ஒடிக் கொண்டிருக்கின்றன.

ஆக்க இலக்கிய காரர்களிடம் உள்ள சிறப்பு சென்ற காலத்தில் நலிந்து போனதை எடுத்து இன்றைய எமது யதார்த்த நிலைக்குஎழுதுவது வரதர் அதனை நன்கு கையாண்டுள்ளார் — என்றார்.

எழுத்தாளர் செங்கை ஆழியான் பேசுகையில்—

ஒரு படைப்பாளி சமூகம் எப்படி இருக்க வேண்டும் என்பதையிட்டு தான் அறிந்தவற்றை, உணர்ந்தவற்றை எழுதுதல் வேண்டும். சமூகத்தில் நாம்பட்ட துயரங்களை வெளிக்கொணர முடியாத நிலை இருந்தது.ம் ஓர்எழுத்தாளன் துணிந்துசொல்கின்ற செயற்பாட்டின் மைல் கல்லாக ''யாழ்ப்பாணத்தார் கண்ணீர்'' அமைகிறது — என்றார்.

கலாநிதி எஸ். சிவலிங்கராஜா வெளியீட்டுரைநிகழ்த்தினார்.

செல்வி மாதவி சுந்தரம் பிள்ளை நூலாசிரியர் வரதர் ஆகியோரும் உரையாற்றினர்.

நூலாசிரியரிடம் இருந்து முதல் பிரதியை புத்தொளி பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இரண்டும் கெட்டான் நிலை

விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தில் 85 சத வீதம் பூர்த்தி செய்யப்பட்டு விட்டது என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தற்போதைய யுத்த நிலைமை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் கூறி உள்ளார்.

யுத்தம் விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்றும், யுத்தத்துக்காகச் செலவிடப்பட்டு வந்த பணம் அதற்குப் பின்பு நாட்டின் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தப் படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனை பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் மட்டும் அல்ல, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பொறுப்புள்ள அமைச்சர்கள் பலரும் கூறி வருகின்றனர். ஆனால் இது வாய்ப்பேச்சாகவே இருந்து வருகிறது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசிடம் இரண்டு மார்க்கங்களே உள்ளன. ஒன்று அரசியல் மார்க்கம். மற்றையது இராணுவ மார்க்கம்.

அரசியல் ரீதியான தீர்வை எட்டும் எதிர்பார்ப்புடனேயே இனப்பிரச்சினை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. இதனை இலகுவாக்கும் நோக்கத்துடன் பிரிட்டனின் உதவியுடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையில் இணக்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

தெரிவுக்குழு இன்னும் வடக்கு—கிழக்கு இணைப்பு மற்றும் காணிப் பங்கீடு போன்ற முக்கிய விடயங்களில் இணக்கம் காணவில்லை. அதன் நடவடிக்கைகளும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

அதே போன்று ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக ஓர் இணக்கத்தைக் கண்டுள்ள போதிலும்; இணக்கம் கண்ட பின்னர் இன்னும் அவர்கள் இருவரும் சந்தித்துப் பேசவில்லை.

ஆகவே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இன்னும் வெகு தூரத்திலேயே இருந்து வருகிறது.

இராணுவத் தீர்வும் இதே கதியில் தான்.

தற்போது ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை மூலம் தாண்டிக்குளத்தில் இருந்து 55ஆவது படையணியும், மணலாறிலிருந்து 53 ஆவது படையணியும் நகர்ந்து பிரதான பாதையில் புளியங்குளம் வரையும் மறு பாதையில் நெடுங்கேணிவரையும் முன்னேறி உள்ளனர்.

இதனை வைத்தே யுத்தத்தில் 85 சத வீதம் பூர்த்தி அடைந்து விட்டது என்கிறார் அனுருத்த ரத்வத்தை.

ஆனால் கண்டது என்ன? பிரதான பாதையைக் கைப்பற்றும் நகர்வு ஆமை வேகத்திலேயே சென்று கொண்டிருக்கிறது.

பிரதி அமைச்சரின் கூற்றுக்கிணங்க யுத்தத்தில் இன்னும் 15 சத வீதமே பூர்த்தியாக இருக்கின்றது. ஆனால் 85 சத வீத வெற்றிக்கு ஏற்ப கைப்பற்றிய பிரதேசங்களில் இயல்பு நிலை திரும்பியதா? அதுவும் இல்லை.

இரண்டும் கெட்டான் நிலையிலேயே அரசு இன்று இருந்து வருகிறது.

---

மீனவர் மீதான தாக்குதல் குறித்து

# இலங்கைக்கு இந்தியா வலுவான ஆட்சேபனை தெரிவிக்க வேண்டும்

## குஜ்ராலிடம் கருணாநிதி கோரிக்கை

சென்னை, ஜுலை 21

''இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவது குறித்து இலங்கை அரசிடம் வலுவான ஆட்சேபம் தெரிவிக்க வேண்டும்,''

இப்படி தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி பிரதமர் இந்தர்குமார் குஜ்ராலைக் கேட்டிருக்கிறார்.

எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நிகழாமல் தடுக்க தகுந்த முறையை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

''சிங்கள மீனவர்கள் சர்வதேச எல்லையைத் தாண்டி வரும் போது, இந்திய கடற்படையோ, கடலோரக் காவல் படையோ அவர்களைத் தாக்காமல் அவர்களைப் பிடித்து காவல் துறையினரிடம் ஒப்படைக்கின்றன.''

''இதேபோல இலங்கை கடற்படையினர் செய்வதில்லை'' என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# தீர்வு யோசனை தோற்றுவிட்டால் எம்மிடம் வேறு மார்க்கம் உண்டு

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 21

'அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால் வேறு தெரிவு எம்மிடம் இருக்கிறது.'

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் குறித்து அரச எம். பிகளுக்கு விளக்கும் கூட்டத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில்அளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அதிகாரப்பரவலாக்கல் யோசனை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால் அடுத்த என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என்று எம். பிக்கள் கேள்வி எழுப்பினர்.

'அப்படியான நிலை ஏற்பட்டால் வேறு தெரிவு உண்டு அதன்படி நடப்பேன்' என்றார் ஜனாதிபதி.

# வட. - கிழக்கு இணைப்பு குறித்து பிறகே முடிவு

அரச முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான அலகு சேர்க்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் பற்றி விவாதம் நடைபெறும் போது, இந்த அலகு தொடர்பான திருத்தம் ஒன்று சமர்ப்பிக்கப்படும் என்றும் —

இந்த அலகு குறித்து இது வரை இணக்கம் காணப்படாததால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

# மனச்சாட்சிப்படி வாக்களிக்க சில சு. கட்சி எம். பிக்கள் விருப்பம்

கொழும்பு, ஜுலை 21

அரச முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது மனச்சாட்சிப்படி வாக்களிக்கப் போவதாக சுதந்திரக் கட்சி எம். பிக்கள் சிலர் தெரிவித்துள்ளனர் என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அதிகாரப்பரவலாக்கல் யோசனை குறித்து அரசில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கும் வகையில் கருத்துறையில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் அதிருப்தியான இந்த எம். பிக்கள் கலந்து கொண்டவராயினும் கருத்து எதையும் வெளியிடாமல் மௌனமாக இருந்தனர் என்றும் —

நாடாளுமன்றத்தில் அந்த அதிகாரப்பரவலாக்கல் யோசனை பற்றி விவாதிக்கப் படும் போது இவர்கள் மனச்சாட்சிப்படி வாக்களிக்க முடிவு செய்துள்ளனர் என்றும் — மேலும் அந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

(இ-3-150)

# கொழும்பு செட்டித்தெரு விடுதிகள்சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜுலை 21

கொழும்பு செட்டித்தெருவில் உள்ள விடுதிகள் நேற்று சுற்றிவளைக்கப்பட்டுப் பல தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கொழும்பில் என்றும் இல்லாதவாறு தமிழர்கள் கைது செய்யப்படுவது அதிகரித்துள்ளதாகவும் —

திடீர் திடீர் எனத் தமிழர்கள் குறிப்பிட்ட இடங்களில் இருந்து அள்ளிச் செல்லப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாகத் தமிழர் மத்தியில் அச்சம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# தமிழர் கைதாவதை நிறுத்தக் கோரிக்கை

## ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

கொழும்பு, ஜுலை 21

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்படுவதை நிறுத்த வேண்டும் என்று கொழும்பில் உள்ள தமிழ் அமைப்புக்கள் ஜனாதிபதியைகோரியுள்ளன.

இந்துமாமன்றம், தமிழர் நடவடிக்கைக் குழு, விவேகானந்தசபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் நேற்றுக் கொழும்பில் கூடி தமிழர்கள் கைது செய்யப்படுவது தொடர்பாக ஆராய்ந்தனர்.

மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழர்கள் நடத்தப்படுகின்றார்கள். தமிழ் மக்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்று முறைப்பாடு செய்தாலும் பதில் கிடைப்பதில்லை. அப்பாவி மக்கள் கைது செய்து துன்புறுத்தப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இப்படி அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிய அவசர கடிதத்தில் தெரிவித்துள்ளனர். (இ-3-164)

# வருட இறுதிக்குள் தீர்வுஇல்லையேல் அரசுக்கு நெருக்கடி ஏற்படும்

கொழும்பு, ஜுலை 21

இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காணாவிட்டால், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்குள் நெருக்கடி ஏற்படலாம்.

இப்படி கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன:

''ஜனாதிபதியும், அமைச்சர் பீரிஸும் அதிகாரப்பரவலாக்கல் யோசனை குறித்து கருத்து வெளியிட்டுவருகின்றனர். ஆனால் உருப்படியாக ஒன்றையும் செய்யவில்லையே'' என்று முன்னணியில் உள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்;

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் வரவு—செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் சமர்ப்பிக்கப்படாவிட்டால், அரசுக்கு வழங்கும் ஆதரவை மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலை ஏற்படும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

வருட முடிவிற்குள் இந்த யோசனை நாடாளுமன்றத்துக்கு வராவிட்டால் அரசுக்கு வழங்கும் ஆதரவை மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலை ஏற்படும் என்று அரசுக்கு ஆதரவு வழங்கும் தமிழ்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் நாடாளுமன்றத்துக்கு வராவிட்டால் அரசுக்குள் நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-150)

# கொழும்பு வரும் அரச அதிகாரிகள் தங்குவதற்கு விசேட நிலையம்

கொழும்பு, ஜுலை 21

கடமை நிமித்தம் வெளி மாவட்டங்களில் இருந்து கொழும்பு வரும் அரச அதிகாரிகள் தங்குவதற்கு விசேட நிலையம் ஒன்று கொழும்பில் அமைக்கப்படவிருக்கிறது.

பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பு கறுவாக்காட்டில் உள்ள அபிவிருத்தி கற்கை நெறிகள் நிலையக் கட்டடத்தில் இந்த வசதி செய்யப்பட்டுள்ளது

தினம் 75 ரூபா வாடகையுடன் மலிவு விலையில்உணவு வசதியும் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடமைநிமித்தம் கொழும்பு வரும் அரசாங்க அதிகாரிகள் கொழும்பு வர முன்னரே இந்த வசதியைப் பெற விண்ணப்பிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

(இ-3-164)

## நாளை

**ஆடி 06**

செவ்வாய்க்கிழமை

திதி: திருதியை பின் இரவு 3·20 வரை.

நட்சத்திரம்: அவிட்டம் மாலை 6.18 வரை.

சுபநேரம்: 10.31-12.01

ராகுகாலம்: 3.01-4.31

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# ஒருவருக்கே மண்வெட்டி

யாழ்ப்பாணம், ஜுலை 21

ஆனைக்கோட்டை விவசாய சம்மேளனத்தில் பதிவு செய்த விவசாயிகளில் ஒருவருக்கு மட்டுமே மண்வெட்டி விநியோகிக்கப்படவுள்ளதாக உடுவில் கமநல சேவை வட்டாரத்தில் இருந்து தகவல் வெளியாகி உள்ளது.

ஏனையோருக்கு மண்வெட்டிகள் ஒதுக்கப்படவில்லை — எனவும்.

விவசாய சம்மேளனத்தில் பதிவினை மேற்கொண்ட சமயம் பகுதி நேரம் (விவசாயத் தொழில்) எனப் பதிவு செய்தமையே இதற்கான காரணமாகும் எனவும்— தெரிவிக்கப்படுகிறது.

(இ-15)

# கூட்டணி எம். பி. அமெரிக்கா செல்வார்

வவுனியா, ஜுலை 21

தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 3 வார கால பயணத்தை மேற்கொண்டு அமெரிக்கா செல்லவுள்ளார்.

அரசசார்பற்ற அமைப்புக்களின் வேண்டுகோளையிட்டு அமெரிக்கா செல்லும் இவர் இலங்கையில் நிலவும் மனித உரிமை மீறல்கள், காணாமல் போதல் போன்ற பல விடயங்கள் குறித்துக் கருத்துரைகளை அங்கு வழங்குவார்.

(இ-3-164)

# வயலில் கொட்டப்படும் குப்பை

சங்கானைச் சந்தையில் சேரும் குப்பைகள் பிரதான வீதியின் அருகில் உள்ள வயல் வெளியில் கொட்டப்படுகின்றன.

இக்கழிவுகளை உண்பதற்கு அங்கு கூடும் நாய்கள் இக்குப்பைகளைக் கிளறி வீதிக்குக் கொண்டு வருகின்றன. (இ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்)

முடியாததால் பஸ் நிலையத்தில் தரித்து நின்ற குறைந்த அளவு பஸ்களே சேவையில் ஈடுபட்டன.

திருநெல்வேலிச் சந்தைக்கு விவசாயிகளின் உற்பத்திப் பொருள்கள் வராததால் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டி ஏற்பட்டது.

மாலையில் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

(இ-3-15)

## சிம்பாப்வே...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பல் இடைவழியில் கைப்பற்றப்பட்டதாக வெளிவந்த செய்திகளின் பின்னணிகள் தெளிவற்றவையாக இருப்பினும், கப்பல் பற்றிய தகவல்களை இதுவரை அறிய முடியவில்லை.

இலங்கை பாதுகாப்பு வட்டாரத் தகவல்களின்படி பல கோடி ரூபா பெறுமதியான 81 மி. மீ. ஷெல்கள் இக்கப்பலில் கொண்டுவரப்பட்டன. இந்த ஷெல்கள் பிரிவினைவாதிகளுக்கு எதிராக இராணுவத்தால் பாவிக்கப்படும் முக்கிய ஆயுதமாகும்.

விடுதலைப் புலிகளால் ஒப்பமிடப்பட்ட ''பாக்ஸ்'' செய்தி ஒன்று கொழும்பிலுள்ள மேற்குலக நாட்டைச் சேர்ந்த தூதரகத்துக்குக் கிடைக்கும் வரை இக்கப்பல் தொடர்பான எந்தத் தகவலையும் தாங்கள் அறிந்திருக்கவில்லை என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன-

இம்மாதம் 11 ஆம் திகதியிடப்பட்ட இந்த 'பாக்ஸ்' செய்தியின்படி இந்தக் கப்பல் கடத்தப்பட்டுள்ளது இருப்பினும் இந்த ''பாக்ஸ்'' தகவல் விடுதலைப் புலிகளின் கடிதத் தலைப்பில் தயாரிக்கப்படவில்லை.

மோட்டார் ஷெல்கள் சூறையாடப்பட்டது தொடர்பாகக் கிடைக்கும் தகவல்கள் ஓர் இக்கட்டான நிலைமையை அரசுக்குத் தோற்றுவித்துள்ளன.

இந்த ஆயுத விற்பனை தொடர்பான தகவல்களை இதுவரை இந்த இரு நாடுகள் மாத்திரமே அறிந்திருந்தன.

இக்கப்பலுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய விவரங்களை வெளியிட இலங்கை அரசு மறுத்துள்ளது.

சிம்பாப்வேயில் இருந்து இந்தக் கப்பல் இம்மாதம் வரவுள்ளது என்பதை அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் அறிந்திருந்தனர்.

அரசின் இரகசியத் தகவல்களும் இராணுவ நடவடிக்கையின் பலவீனங்களும் இந்தச் சம்பவத்தின் மூலம் வெளிவந்துள்ளன என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்படி பி. பி. சி தெரிவித்தது. (இ-3-10-150)

## 2 படையினர் திருமலையில் உயிரிழப்பு

திருகோணமலை, ஜூலை 21

திருகோணமலை மாவட்டம் கோமரங்கடவையில் துவிறுவெல கிராமத்தில் நேற்று முன்தினம் மாலை 6.45 மணியளவில் ரோந்து முடித்து திரும்பிய படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர், ஒருவர் காயமடைந்தார், மற்றொரு படையினரைக் காணவில்லை.

உயிரிழந்த படையினரின் ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றிச் சென்றனர்.

(இ-3-150)

## ஐ. தே. கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

கலந்துரையாடி அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு மூதூரில் தங்கினார்.

அரசியல் வாழ்வில் 20 ஆண்டு காலத்தைப் பூர்த்தி செய்யும் நிகழ்ச்சிகளை நடத்துவது தொடர்பாக ஆராய்ந்த பின்னர் நேற்றுக் காலை திருகோணமலை நகருக்குத் திரும்பினார்.

பின்னர் இறக்கக்கண்டியில் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்ட முஸ்லிம் மீனவர்களின் நிலை குறித்து ஆராய இறக்கக்கண்டிக்குச் சென்று கொண்டிருந்த அவர் சென்ற ஜீப் மறிக்கப்பட்ட சமயமே இச்சம்பவம் இடம்பெற்றது.

மஹ்ரூப் உட்பட ஐந்து பேரும் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்தனர். சராஜ் என்ற 4 வயதுக் குழந்தை மட்டும் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமானது.

இச்சம்பவத்தில் இறந்தவர்களின் சடலங்கள் திருகோணமலை மாவட்ட நீதிவான் எஸ். சொர்ணராஜாவால் உறவினர்களிடம் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டது. மஹ்ருப்பின் சடலம் கிண்ணியாவில் உள்ள மாஞ்சோலைக் கிராமத்தில் அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ளது.

சடலங்களில் சூட்டுக் காயங்களும், வெட்டுக்காயங்களும் காணப்பட்டன என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மஹ்ரூபின் நெற்றியில் சூட்டுக் காயமும், கழுத்தில் வெட்டுக்காயமும் காணப்பட்டன.

கடந்த 5 ஆம் திகதி திருகோணமலை சண்முக வித்தியாலயத்தில் நடந்த வைபவம் ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு திரும்புகையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் திருகோணமலை தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பியான அ. தங்கத்துரை உட்பட 60 பேர்கொல்லப்பட்டது தெரிந்ததே (இ-3-10-150-164))

## சூரிச் மாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

களுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் பலாபலன்கள், தோல்விக்கான காரணங்கள் பற்றி இந்த மாநாட்டில் ஆராயப்பட விருப்பதாக அந்த அமைப்பு பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டுக்கு இந்தியாவில் இருந்து ஐந்து பிரமுகர்களும், இலங்கையில் இருந்து 10 பிரமுகர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து அமைச்சர்கள் எவரும் அழைக்கப்படவில்லை.

ஐ. தே. கவின் பிரமுகர்கள் சிலர் அழைக்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்த மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து ஐ. தே. க. இன்னமும் முடிவு செய்யவில்லை என்று ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த ஏ. சி. எஸ். ஹமிட் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக இந்த மாநாட்டில் பேச அவர் அழைக்கப்பட்டார் என்றும்—

இந்த மாநாட்டில் கலந்து கொள்ள அவர் இன்னமும் முடிவு செய்யவில்லை என்றும்—தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-07-1997இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# தாக்குதலில் 40 பேர் ஈடுபட்டிருக்கலாம்!

## திருமலைப் பொலீஸார் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

திருமலை மாவட்ட ஐ.தே.க. எம். பி. மஹ்ரூப் பயணம் செய்த வாகனம் மீதான தாக்குதலில் 40 பேர் வரை ஈடுபட்டிருக்கலாம் என்று திருகோணமலைப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக பி. பி. ஸியின் சிங்களச் சேவைக்கு லங்கா தீப பத்திரிகையின் திருகோணமலைச் செய்தியாளர் திருமதி விசாகாஜெயசேகரா பின்வருமாறு தெரிவித்தார்.

தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் தாக்குதலை நடத்திவிட்டு சல்லி மற்றும் சாம்பல்தீவுக் கிராமங்களை நோக்கிச் சென்றதாக பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இத்தாக்குதலை விடுதலைப் புலிகள் செய்தார்கள் என்பது தொடர்பான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

மஹ்ரூப்பின் உயிருக்கு ஆபத்து இருக்கவில்லை என அவரின் முன்னாள் செயலாளர் அபூபக்கர் ஹன்சார் தெரிவிக்கிறார் இந்தத் தாக்குதலை செய்தவர்கள் யார் எனக் கூற முடியாதுள்ளது என மஹ்ரூப்பின் குடும்பத்தினரும் உறவினர்களும் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்ற இடத்திற்குச் சமீபமாக பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்றுள்ளது. மஹ்ரூப் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்ட வேளையில் பொலீஸ் சோதனைச் சாவடி மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்ட இடத்துக்கு பொலீஸார் வராமல் தடுக்கவே பொலீஸ் சோதனைச் சாவடி மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு திருமதி விசாகா ஜெயசேகரா தெரிவித்தார்.

(இ-10)

## அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிஸ்டன், ஜூலை 21

விரைவில் புதுடில்லியில் பாரிய அளவிலான தீவிரவாதத் தாக்குதல் ஒன்று நடைபெறக்கூடும் என அமெரிக்கா இந்தியாவிலுள்ள தனது தூதரக அதிகாரிகளை எச்சரித்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

(ஐ-10)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 5 ஆம் திகதி இரகோற்சவமும், மறுநாள் தீர்த்தவுற்சவமும் நடைபெறும். (இ-3)

## துப்பாக்கி நபர் கைது!

கொழும்பு, ஜூலை 21

அம்பாறையில் அட்டாளைச்சேனை தேசிய மீலாதுத் நபி விழா கொண்டாட்ட மைதானத்துக்குள் பிரவேசிக்க முயன்ற துப்பாக்கி நபர் ஒருவரை படையினர் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

அமைச்சர் அஷ்ரப்பையோ அல்லது விழாக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளும் பிரமுகர்களையோ கொலை செய்வதற்காக இவர் அனுப்பப்பட்டிருக்கலாம் என பொலீஸ் உளவறியும் பிரிவினர் தெரிவித்தனர்.

இவரைக் கைது செய்யும் போது அதிநவீன கைத்துப்பாக்கி ஒன்றும் சக்திவாய்ந்த 6 கைக்குண்டுகளும் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## கொல்லப்பட்ட 6 பேரின் விவரம்

திருகோணமலை, ஜூலை 21

திருகோணமலையில் நேற்று நடந்த சம்பவத்தில் கொல்லப்பட்ட 6 பேரின் விவரம் வருமாறு:-

- ★ என். ஈ. எச். மஹ்ரூப். நாடாளுமன்ற உறுப்பினர்.
- ★ எம். ஐ. எம். மன்சூர். ஜீப் சாரதி.
- ★ மன்சூர் சராஜ்—ஜீப் சாரதியின் 4 வயது மகன்.
- ★ ஐ. ஏ. லத்தீப்—ஆசிரியர்.
- ★ யு. என். எம். உதுமான்.
- ★ எம்.கே. அயத்துல்லா நஜிபுதீன்—மெய்ப்பாதுகாவல் பொலீஸ் கான்ஸ்டபிள்.

(இ-3-150)

## மஹ்ரூப்பின் சடலத்துக்கு ஏராளமானோர் அஞ்சலி

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப்பின் சடலம் மாஞ்சோலைக் கிராமத்தில் உள்ள அவரது வீட்டில் நேற்று வைக்கப்பட்டிருந்த சமயம் ஏராளமானவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

திருகோணமலை ஐ.தே.க. முன்னாள் எம்.பியும், மஹ்ரூப்பின் சகோதரருமான முகமது அலி, திருகோணமலை மாவட்ட மற்றொரு ஐ. தே. கட்சி எம் பியான சுனில் சாந்த ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர்.

60 வயது நிரம்பிய மஹ்ரூப்புக்கு ஒரு மகனும், இரு மகள்மாரும் உள்ளனர்.

(இ-3-150)

## முக்கிய நகரம் ஒன்றை தலிபான் படை இழந்தது

காபூல், ஜூலை 21

நேற்றும் நேற்று முன்தினமும் தலிபான் படைகளுக்கும் எதிர் கூட்டணிப் படைகளுக்கும் இடையே இடம் பெற்ற உக்கிரமான சண்டைகளில் தலிபான் படைகள் படு தோல்வி கண்டுள்ளன.

500 க்கும் மேலான தலிபான் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்

கேந்திர முக்கியத்துவம் மிகு சரிகா நகர் மற்றும் பஹ்ரம் விமானத் தளத்தினை எதிர் கூட்டணிப் படைகள் கைப்பற்றியுள்ளன.

சரிகா நகர் தலைநகர் காபூலில் இருந்து 25 மைல் தூரத்தில் அமைந்துள்ள முக்கிய நகரமாகும்.

தலைநகர் காபூல் மீதும் எதிர் கூட்டணி படைகள் விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சரிகா நகர் வீழ்ந்துள்ளதால் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள தலிபான் படைகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

(இ-10)

## ஊழல் இரண்டறக்கலந்து விட்டது என்கிறார் பிரதமர் குஜ்ரால்

புதுடில்லி, ஜூலை 21

இந்தியாவின் இரத்தநாளங்களுக்குள் ஊழல் புகுந்து நிலைபெற்று விட்டது.

இப்படி இந்தியப் பிரதமர் ஐ கே. குஜ்ரால் வேதனை வெளியிட்டுள்ளார்.

'இன்று அமைச்சர்கள் மட்டத்தில் மட்டும் அல்ல சகல மட்டங்களிலும் இங்கு ஊழல் நடக்கிறது.

வாரந்தோறும் நான் பொதுமக்களைச் சந்தித்துக் குறைகளைக் கேட்கும் போது ''ஐயா என் வீட்டுக்கு மின் இணைப்பு வேண்டும். ஆனால் அதிகாரிகள் லஞ்சம் கேட்கிறார்கள்'' எனப்பொது மக்கள் தெரிவிக்கின்றனர்,

அதாவது லஞ்சம் கொடுக்காமல் எதுவும் இந்த நாட்டில் நடக்காது என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் போல் தெரிகிறது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-10)

## சுற்றிவளைப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

25 பேரை கைது செய்தனர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதியையடுத்த சல்லி, சாம்பல்தீவுப்பகுதிகளில் தேடுதல் நடத்திய சமயமே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதேநேரம் — இன்று காலை 9 மணிக்கு கிண்ணியாவில் இடம் பெறும் மஹ்ரூப்பின் இறுதிக்கிரியைகளையொட்டி நகரில் பொலீஸாரும், இராணுவத்தினரும் இணைந்து பாதுகாப்பைப்பலப்படுத்துவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இறுதிக்கிரியைகளில் ஐ. தே. க. சார்பில் திருமதி மனோகரி புலேந்திரன், அஸ்வர், கருணசேன, கொடித்துவக்கு ஆகியோர் கலந்து கொள்வர்.

அரசு சார்பில் சில அமைச்சர்களும் கலந்து கொள்ளலாம் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-10-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org